**செ.வெ.எண்: 55** **நாள்: 28.08.2021**

**நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், கீழ்வேளூர் மற்றும் கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.08.2021) ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், கீழ்வேளூர் மற்றும் கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.08.2021) ஆய்வு மேற்கொண்டார்.

திருமருகல், கீழ்வேளூர், கீழையூர் பகுதிகளில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள ஏதுவாக திருமருகல் ஒன்றியத்திற்கு உட்பட்ட திட்டச்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை பார்வையிட்டும், மேலக்கரையிருப்பு சமுதாயகூடம், பொறகலாங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, திருமருகல் உயர்நிலைப் பள்ளி கீழ்வேளூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட தேவூர் குழந்தை ஏசு பள்ளி மற்றும் கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட திருப்பூண்டி மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு வருவதையும், திருமருகல் ஊராட்சி சேகல் மற்றும் வெங்கிடங்கால் ஊராட்சி, தேவூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொருள் இருப்பு மற்றும் வழங்கப்பட்ட விபரம் குறித்தும், திருமருகல் உயர்நிலைப் பள்ளி மற்றும் திருப்பூண்டி மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறை, பள்ளி வளாகம், கழிப்பறை குடிநீர் வசதி மற்றும் தூய்மைப் பணிகள் குறித்தும் தலைமையாசிரியரிடம் பள்ளித் திறக்கும் நாளில் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

பள்ளிகள் திறப்பதை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் வகுப்பறைகள், பள்ளி வளாகங்கள் மற்றும் கழிப்பறை, குடிநீர் தேக்க தொட்டிகள் போன்றவைகளை தூய்மையான நிலையில் வைத்திருக்க வேண்டுமென மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழக அரசின் வழிகாட்டுதலின் பேரில், கொரோனா நோய் தொற்று மூன்றாம் அலை பரவுவதை தடுக்கும் பொருட்டு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை தொடர்ந்து வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா, கொடியேற்றத்துடன் நாளை 29.08.2021 முதல் 08.09.2021 வரை நடைபெறும். விழாவின் அனைத்து நிகழ்ச்சிகளில் பொது மக்கள் கலந்துக் கொள்ள அனுமதியில்லை. பேராலயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் காணொளி வாயிலாக ஒளிபரப்பலாம். வேளாங்கண்ணி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து தங்கும் விடுதிகளும் விழா நாட்களில் திறக்கப்படாது. திருவிழாவை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கும், பிற கடைகள் மற்றும் உணவகங்கள் திறப்பதற்கும் அனுமதியில்லை. இதனைக் குறித்து வேளாங்கண்ணி பகுதிகளில் மாவட்ட அட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**